மொரவெவ பிரதேச சபை - 2023

-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொரவெவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொரவெவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்த பயன்படுத்தியுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020, 2021, 2022 ஆண்டுகளிற்காக முறையே ரூபா 13,800, ரூபா 24,600 மற்றும் ரூபா | ஏற்றுக் கொள்கிறேன். 2024 கணக்குகள் தயாரிக்கும் போது | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 59,400 ஆகவும் மீளாய்வாண்டிற்காகவும் கணக்காய்வு கட்டணம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வ கட்டணத்திற்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பதென. | |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் உலக வங்கி உதவியின் அன்பளிப்பாக கிடைத்த ரூபா 5,900,000 பெறுமதியான RO plant ஒன்றை கணக்கிற்கு எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். 2024 கணக்குகள் தயாரிக்கும் போது குறித்த சீராக்கத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |
| (இ) | 04 சந்தர்ப்பங்களில் ரூபா 511,600 செலவிட்டு கொள்வனவு செய்திருந்த பொருட்கள் மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். 2023 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த தகவல்கள் கைவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சரி செய்வதென. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |
| (ஈ) | பெறுமதி ரூபா 662,475 ஆன களஞ்சியத்தின் எஞ்சிய இருப்புக்கள் கணக்குளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். 2023 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த தகவல்கள் கைவிடப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் சரி செய்வதென. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |

### 1.6.2 தொங்கள் கணக்கு

| **விடயம்** | **தோகை** | **தொங்கலாக இருந்த காலம்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| தொங்கள் கணக்கு | 7,864,759 | 2011 ஆண்டு முதல் | புதில் வழங்கப்டவில்லை. | தொங்கள் கணக்கை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | **விடயம்** | **தொகை** | **வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | | | |
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் | 62,490,213 | காணி அனுமதிப் பத்திரம் அல்லது உறுதி, அளவைத் திட்டம் | தற்போது தகவல்களை சேகரித்து வருவதுடன் 2024 ஆரம்ப கணக்கறிக்கை தயாரிக்கும் போது பூரண தகவல்களை வழங்குவதென. | கணக்கு விடயங்களிற்கான சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மோட்டார் வண்டிகள் மற்றும் ஊர்திச்சாலை | 51,305,881 | நிலையான சொத்துக்கள் பதிவேடு | -மேற்படி- | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | தளபாடங்கள் பொருத்திகள் உபகரணங்கள் | 2,167,079 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | இருப்பு | 216,165 | இருப்பு கணக்கெடுப்பு அறிக்கை | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | முற்பணம் கொடுப்பனவு | 1,826,036 | காலப்பகுப்பாய்வு, தனி நபர் மீதி பட்டியல் | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | வருமானம் கடன்படுனர் | 6,016,297 | குடன்படுனர் பதிவேடு, காலப்பகுப்பாய்வு. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | செலவின கடன்கொடுனர் | 3,689,700 | தனி நபர் மீதி பட்டியல், காலப்பகுப்பாய்வு. | -மேற்படி- | -மேற்படி- |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) | 24 ஆந் பிரிவு | சபைக்கு சொந்தமான அனைத்து பாதைகளையும் இனங்கண்டு இன்வென்ட்றியில் உட்படுத்த அல்லது வர்த்தமானியில் பிரசுரிக்கவும் நடவடிக்கைத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவக்கை எடுப்பதென. | காணப்படும் அனைத்து பாதைகளையும் இன்வென்றியில் உட்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 126 பிரிவு | சபையிற்கு புதிய வருமானம் ஈட்டக்கூடிய துணை சட்டங்களை விதித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவக்கை எடுப்பதென. | பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | 134 ஆந் பிரிவு | சபையின் அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள முன்னேற்றிய பிரதேசங்கள் காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரி மற்றும் வரி விதிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னேற்றிய 3 பிரதேசங்கள் இனங்கணப்பட்டுள்ளன. அவற்றை வர்த்தமானியில் பிரசுரித்து வீதவரி அறவிட திட்டமிட்டுள்ளதென. | பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 159 பிரிவு | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 2,245,703 ஆன நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானங்களின் ஒரு பகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதியை அறிவிட தேவையான நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (ஆ) | 2018 இன் 19 ஆந் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (2) பிரிவு | கணக்குகளுடன் சமர்ப்பிக்க வேண்டிய செயலாற்றுகை அறிக்கை கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 02/2018 சுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்க மற்றும் செயலாற்றுகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 1980 இன் 47 ஆம் இலக்கம் கொண்ட தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் 2008 பெப்ரவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட வர்த்தமானி | செல்லுபடியான சுற்றாடல் அனுமதிப் பத்திரமொன்று இன்றி வியாபாரங்களை நடாத்திச் செல்லும் சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளாத வியாபாரங்களை இனங்கண்டு குறித்த அனுமதிப் பத்திரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதென. | சட்டம் மற்றும் வர்த்தமானி ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | நீதிமன்ற அமைச்சின் செயலாளரின் இலக்கம் 04/1994 மற்றும் 1994 | ஒவ்வொறு பதவிநிலை உத்தியோகத்தரினாலும் வருடாந்தம் தமது சொத்துக்கள் | 2024 ஆண்டிற்காக குறித்த வெளிப்படுத்தலை | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| பெப்ரவரி 18 திகதிய சுற்றறிக்கை | பொறுப்புக்களை வெளிப்படுத்த வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழங்க நடவடிக்கை எடுப்பதென. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 176,105 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 280,387 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வாடகை | 6,200 | 3,862 | 3,836 | 495 | 5,100 | 2,882 | 3,193 | 469 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 425 | 243 | 244 | - | 250 | 1,115 | 1,128 | - |
| ஏனைய வருமானம் | - | 1,366 | 1,002 | 364 | - | - | - | - |
| மொத்தம் | **6,625** | **5,471** | **5,082** | **859** | **5,350** | **3,997** | **4,321** | **469** |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேசங்களை குறிப்பாக காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரி மற்றும் வரி விதிக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால் சபையின் வருமானம் வீழ்ச்சியடைந்திருந்தது. | முன்னேற்றிய 3 பிரதேசங்கள் இனங்கணப்பட்டுள்ளன. அவற்றை வர்த்தமானியில் பிரசுரித்து வீதவரி அறவிட திட்டமிட்டுள்ளதென. | வருமானத்தை வளர்த்துக் கொள்ள நடவக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) **வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 198,138 ஆன கடையறை வாடகை நிலுவையாக காணப்பட்டதுடன் அவற்றிலிருந்து ரூபா 58,336 தொகை கடந்த ஆண்டிற்காக அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | நிலுவை வாடகை வருமானத்திலிருந்து ஒரு பகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதியை அறவிட தேவையான நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானத்தை அறவிட நடவக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிலுவையாக நிலவிய வாகன வாடகை ரூபா 299,650 ஆனதுடன் அவற்றில் ரூபா 287,780 ஆன வாகன வாடகை பல ஆண்டுகளாக நிலவிவரும் நிலுவையானது. | நிலுவை வாடகை வருமானத்திலிருந்து ஒரு பகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதியை அறவிட தேவையான நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையினால் ஏனைய புதிய வருமான வழிகளை இனங்கண்டு கட்டணம் அறிவட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. உதாரணமாக அதிகார பிரதேசத்திலுள்ள தொலைத் தொடர்பு கோபுரங்கள், முச்சக்கர வண்டி தரப்பிடத்திற்காக கட்டணம் தீர்மானித்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதிய வருமான மூலங்கள் சிலவற்றை இனங்கண்டுள்ளதுடன் முச்சக்கர வண்டி தரிப்பிட பதிவு செய்தலை ஆரம்பிக்க நடவக்கை எடுப்பதென. | வருமானத்தை வளர்த்துக் கொள்ள நடவக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் பிரதான 28 விடயங்களை நிரைவேற்ற துணைச் சட்டம் விதிக்கப்படவிருந்த போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரை துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுப்பதென. | முறையாக துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய கடன் அபிவிருத்தி திணைக்களத்திடம் பெற்றுக் கொண்ட கடன் தொகைக்குரிய தவணை செலுத்துதல் நடைமுறை ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக செலுத்த வேண்டிய | திட்டமிட்டவாறு வருமானம் கிடைக்காததால் குறித்த கடன் தவணைகளை செலுத்த முடியாது போனதுடன் இந்த ஆண்டில் நிலுவை கடன் | சிறப்பான நிதி முகாமைத்துவத்தை பேணிக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன் மீதி ரூபா 3,300,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | மீதியின் ஒரு பகுதியை செலுத்த நடவடிக்கை எடுப்பதென. | |
| (ஆ) | 2017 ஆண்டில் ரூபா 1,826,485 முற்பாணமாக பெற்றிருந்ததுடன் அந்த முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதென. | முற்பணம் தொடர்பாக சிறப்பான கட்டுப்பாட்டை பேணிக் கொள்ள வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டில் ரூபா 16,695,000 கிரயமான JCB இயந்திரம் தற்போது 05 வருட அளவு காலமாக செயற்படாது காணப்பட்டது. | குறித்த வாகனத்தை திருத்துவதற்கு பாரிய நிதி செலவாவதால் சபைக்கு அவ்வாறான பாரிய நிதிஇல்லாததால் இந்த நிலைமை காணப்படுவதென. | சொத்தக்கள் முகாமைத்துவத்தை முறையாக்க வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 02/2017 கொண்ட 2017 திசெம்பர் 21 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ கருத்திட்டம் மூலம் கிடைத்த 02 வாகனங்கள் மற்றும் 02 டேலர்களை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்கள் 02 இனை மாத்திரம் சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதென. | சொத்துக்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 10 மில்லியனிற்கு மதிப்பிட்டு நிர்மாணித்திருந்த சந்தை கட்டிடம் ஆரம்பத்தில் தெரிவு செய்த ஒப்பந்ததாரரிற்கு ரூபா 1,764,413 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் விலை விலகலிற்காக கோரிய போதும் அந்த விலை விலகல்களை வழங்காத காரணத்தால் ஆரம்ப ஒப்பந்ததாரர் அந் நிர்மாணத்திலிருந்து ஒதுங்கியிருந்தார். பின்னர் வேரொறு ஒப்பந்ததாரரிற்கு இந் நிர்மாணத்தை ஒப்படைத்திருந்த போதும் கொடுப்பனவு செய்யும் போது Joint Messerment பெற்றிருக்கவில்லை. இது Standard Building Documents இற்கு முரணானது. | குறித்த நடவடிக்கை கருத்திட்ட பொறுப்பு பொறியியலாரின் பூரணமான கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் பின்னர் அவ்வாறான தவறுகள் இடம்பெறாது பொறுப்பேற்பதென. | கருத்திட்ட கண்காணிப்பு மற்றும் திட்டமிடல் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நடைமுறை ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி ரூபா 1,308,800 ஆன 11 பெறுகைகளை பரீட்சிக்கும் போது விலைமனு கோரல் திறக்கும் போது செயலாளர் மாத்திரம் கைச்சாத்திட்டிருந்ததுடன் அதற்காக தொழிநுட்ப மதிப்பீடொன்றும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | பெறுகைகள் நடவடிக்கையை முறையாக்க வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கிகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை கவனிக்கும் போது 09 பதவிகளில் 10 வெற்றிடங்கள் காணப்பட்டன. | குறித்த வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ளும் அதிக தேவைப்பாடு காணப்பட்ட போதும் புதிய நியமனங்களை வழங்காத அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் மீது ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதால் அவ் வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள முடியாதுள்ளதென. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கிழக்கு மாகாண நிதி சுற்றறிக்கை PT/03/2021 பிரகாரம் பிணை வைக்க வேண்டிய 11 அலுவலர்களினால் போதிய வாறு பிணை வைத்திருக்கவில்லை. | 2024 ஆண்டில் குறித்த அலுவலர்களைக் கொண்டு பிணை வைக்க நடவடிக்கை எடுப்பதென. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பல வருடங்களிற்கு முன்னர் 04 அலுவலர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 100,146 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | கடன் மீதியை அறிவட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் 2023 ஆண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்திருக்காததுடன் மீளாய்வாண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்வரும் ஆண்டுகளிலிருந்து செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதென. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வுகள் செயற்படுத்தப்பட்டிருந்த போதும் அப் பிரிவினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை ஒழுங்குபடுத்தல் மற்றும் நடாத்திச் செல்லல் மாத்திரம் மேற்கொள்வதுடன் முறையான கணக்காய்வு நிகழ்சித் திட்டத்தின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | உள்ளக கணக்காய்வினை முறையாக்க வேண்டும். |

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பிடுகையில் 05 வருமான விடயங்களில் 19.83 சதவீதம் முதல் 83.25 சதவீதம் வரையும் 05 செலவு விடயங்களில் 19.81 சதவீதம் முதல் 46.42 சதவீதம் வரை விலகல்கள் காணப்பட்டன. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | வரவு செலவுத் திட்டத்தை நடைமுறை சாத்தியமாக தயாரிக்க வேண்டும். |

### 4.4 நிலைபேறான அபிபிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திலுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறித்த பிரமாணங்களை இனங்காண்பது தொடர்பாக போதிய தெளிவொன்றை மீளாய்வாண்டிலும் பெற்றுக் கொண்டிருக்காத போதும் இரண்டு நிலைபேறான அபிவிருத்தி இலக்குளை மாத்திரம் செயற்படுத்தி இருந்தன. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறித்த பிரமாணங்களை அடைந்து கொள்ள வேண்டும். |